சென்னை சட்டசபை

சனிக்கிழமை நிகழ்ச்சிகள்

வரவு செலவு திட்ட கிராண்டு

கூட்டுறவுச் சங்கங்கள்

கைத்தொழிலபிவிருத்தி

(0)

சென்னை, மார்ச்சு 23

சட்டசபையில் பிறகு மீண்டும் வரவு செலவுத் திட்ட கிராண்டுகளின் மீது விவாதம் ஆரம்பிக்கப்பட்டதும் திரு. ஏ. பி. செட்டி மந்திரி வசமிருந்த இலாகா சம்பந்தமாக விவசாய ராயல் கமிஷன் செய்திருக்கும் சிபாரிசுகளைக் குறித்து விவாதிப்பதன் பொருட்டு அந்த இலாகா செலவுக்குக் கேட்கப்பட்ட 10·42 லட்ச ரூபாயில் ரூபாய் 100 குறைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வந்து, கால் நடைகளுக்குள் பலகொடிய வியாதிகள் பரவி மரண விகிதம் அதிகரிக்கின்றது. [illegible] மேலும் இத்தகைய முறைகளினால் [illegible] ஏற்படுகின்றது. நாடெங்கும் அநுசரிக்கத்தக்கதான சட்டமியற்ற [illegible] சர்க்கார் நிறைவேற்ற வேண்டுவது அவசியம். மேலும், எங்கும் மிருக வைத்தியசாலைகள் ஸ்தாபித்து பின்னும் அதிகமாகப் பல மிருக வைத்திய உதவி சர்ஜன்களை நியமிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் [illegible] எனக் கூறினர்.

நாராயணசாமிப் பிள்ளை

திரு. டி. எஸ். நாராயணசாமிப் பிள்ளை தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் அந்த இலாகா மிகத் திறமையாய் [illegible] அதிகாரிகளின் [illegible] மிருக வைத்திய இலாகா [illegible] செய்ய வேண்டியது அவசியமெனக் கேட்டுக்கொண்டார்.

பின்னர் பேசிய டாக்டர் மல்லையா இம்மாகாணத்தில் கால் நடைகளுக்குள் பிளேக் பரவி சுமார் ஏழெட்டு வருடங்களுக்குள் ஏராளமாக மரணவிகிதம் அதிகரித்திருப்பதாயும், சர்க்கார் இதனை ஒழிக்கச் சுமார் எட்டு லட்ச ரூபாய் செலவிட்டு [illegible] கால்நடைகளின் மரணத்தால் சுமார் 3 கோடி ரூபாய்க்குமேல் நஷ்டமேற்பட்டிருப்பதாயும் [illegible] அனுசரிக்கப்படும் முறை [illegible] சர்க்கார் ஒரு ஜில்லாவிலாவது [illegible] மாதிரியாக [illegible] செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

திரு. எப். ஜி. ஜேம்ஸ் பேசுகையில் மந்திரி விவசாயக்கமிஷனின் சிபாரிசுகள் சம்பந்தமாக [illegible] குறை கூறுவதற்கு [illegible] வரவு செலவுத்திட்டத்தில் மிருக வைத்திய இலாகா சம்பந்தமாக [illegible] செய்யவேண்டும். [illegible] உதவி சர்ஜன்களை [illegible] உடனே [illegible] மிருக வைத்திய சர்ஜன்களை நியமிக்க [illegible] சர்க்கார் மிகக் கவனம் செலுத்தவேண்டும். இந்த இலாகாவின் அபிவிருத்தி [illegible]

[illegible]

[illegible] அழுகைப் [illegible] நன்மை புதுமை யுமுடைதை [illegible] தாம்!

[illegible] நன்மையைக் கிராமவாசிகள் முழுதும் பெற்ற நன்மை பெறச் செய்ய வேண்டியது அவசியம் எனக் கூறினர்.

திரு. ஜே. ஏ. சல்தானா பேசுகையில் மேற்குக் கரை பிரதேசத்தில் கால்நடைகளுக்குள் [illegible] கொடிய நோய்கள் பரவி கால்நடைகளின் மரண விகிதம் அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டி மிருக வைத்திய இலாகாவுக்கு [illegible] குறைவாய் இருப்பதால் [illegible] மிருக வைத்திய உதவி சர்ஜன்கள் [illegible] ஜில்லாவில் கால் நடைகளுக்குள் [illegible] வியாதி பரவி மரண விகிதம் அதிகரித்து வருவதாயும், [illegible] சர்க்கார் கவனிக்க வேண்டும் எனக் கூறினர்.

திரு. ஆர். நாராயண செட்டி வடஆற்காடு ஜில்லாவில் கால் நடைகளுக்குள் கொடிய வியாதி பரவி மரண விகிதம் அதிகரித்து வருவதாயும், [illegible] மிருக வைத்திய உதவி சர்ஜன் [illegible] அதிகப்படுத்த வேண்டும் எனக் கூறினர்.

அற்புதசாமி உடையார்

திரு. அற்புதசாமி உடையார் கால் நடைகளுக்குள் பரவி வரும் கொடிய வியாதிகளை நிறுத்தி மரண விகிதத்தைக் குறைப்பதற்கும் பல முன்னேற்றமான முறைகளை அனுசரிக்க வேண்டியதன் அவசியத்தைத் தாமும் ஒப்புக்கொண்ட போதிலும், அதற்கும் மந்திரி மீது குறை கூறிக் கண்டிப்பதற்கும் சம்பந்தமில்லாததால் தாம் இத்தீர்மானத்தை ஆதரிக்க முடியாதென்றும் குறிப்பிட்டார்.

திரு. காளேஸ்வரராவ் மிருக வைத்திய இலாகா உதவி சர்ஜன்கள் தொகையை அதிகப்படுத்தி விவசாய இலாகாவும், மிருகவைத்திய இலாகாவும் தங்கள் வேலைகளைக்குறித்து [illegible] நன்குணர்த்தி அவற்றின் மூலமாய் அவர்கள் நன்மையடையச் செய்ய வேண்டுமெனக் கூறினர்.

மந்திரியின் பதில்

மந்திரி பதிலளிக்கையில் தாம் வரவு செலவுத் திட்டத்தின்மீது பொதுவாய் விவாதிக்கப்பட்டபோது பேசியிருப்பதைக் குறிப்பிட்டு [illegible] உதவி சர்ஜன்களை அதிகப்படுத்த விரும்பினாலும் [illegible] கோவை கலாசாலையில் சேர்த்துக் கொள்ளப்படும் [illegible] மாணவர் தொகையையும் அதிகப்படுத்தியிருப்பதாயும், அவ்விலாகா [illegible] ராயல் கமிஷன் சிபாரிசுகளைச் சர்க்கார் கவனித்து வருவதாயும் கூறினர்.

முடிவில் திரு. ஏ. பி. செட்டி தமது தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொண்டமையால் மிருகவைத்திய இலாகா செலவுகளுக்கு 10,42 லட்சரூபாய் ஒதுக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிராண்டுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

கூட்டுறவு இலாகா

பிறகு மந்திரி கனம் சேதுரத்னம் ஐயர் வரவு செலவுத்திட்டத்தின் 25 வது டிமாண்டின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்காக 10·83 லட்ச ரூபாய் ஒதுக்க அனுமதிக்கப்பட வேண்டுமென தீர்மானம் கொண்டு வந்தார்.

திரு. பஷீர் அஹமது [illegible] ஜில்லாக்களில் விவசாய பாங்கிகள் ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த அத்தொகையில் ரூபாய் 100 குறைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வந்து [illegible] இதன் அவசியத்தைக் குறித்து வற்புறுத்தியிருந்தும் மந்திரி [illegible] என்ன ஏற்பாடு செய்திருக்கின்றாரென்று தெரியவில்லை என்றும், [illegible]

திரு. ஆதிநாராயண செட்டியார் சென்னை மாகாணத்தில் விவசாயிகளுக்குச் சுமார் 30 கோடி ரூபாய்வரை கடன் ஏற்பட்டிருப்பதாய் [illegible]

திரு. பி. முனிசாமி நாயுடு இம்மாகாணத்துக் கூட்டுறவுச் சங்க [illegible] வேலை[illegible]வைக் குறித்து விசாரித்தறிவிப்பதன் பொருட்டு நியமிக்கப்பட டென்னிஷென்ட் கமிட்டி சிபார்சுகளின் சம்பந்தமாக மந்திரி எத்தகைய ஏற்பாடுகள் செய்திருக்கிறாரென்று தெரியவில்லை என்றும் அக்கமிட்டியார் சொத்துக்களை மாற்றுவதன் சம்பந்தமான சட்டம் இன்சால்வென்ஸி சட்டம் முதலியவற்றைத் திருத்த வேண்டுமென்று யோசனை கூறியிருப்பதன் சம்பந்தமாக என்ன ஏற்பாடு செய்யப்பட்டதென்று தெரியவில்லையென்றும் கூறினர்.

பின்னும் திருவாளர்கள் ஹரிசர்வோத்தமராவும், நாகண்ண கௌடாவும் தீர்மானத்தை ஆதரித்து நில அடமான பாங்கிகளின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியபின் திரு. வி. ஐ. முனிசாமிப் பிள்ளை அப்பாங்கி வேலைகளின் சம்பந்தமாக தாழ்த்தப்பட்ட வகுப்பாரையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டினார்.

திரு. வி. கோபால மேனன் விவசாய பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பது மிகப் பழமையான விஷயமென்றும், ரயத்துகளுக்கு விவசாயத்தில் உதவி புரியத்தக்க பாங்கிகள் பலவற்றை நாடெங்கும் ஸ்தாபிக்க வேண்டியது அத்தியாவசியமென்றும் குறிப்பிட்டார்.

திரு. கோட்டி ரெட்டி நில அடமான பாங்கிகள் எங்கும் ஸ்தாபிக்கப்பட்டு வட்டி விகிதம் குறைக்கப்படுமாயின் விவசாயிகளின் கஷ்ட நிலைமை ஒருவாறு சரிப்படக் கூடுமென்றும், பாங்கிகள் ஸ்தாபிக்கப்படுவதற்கு அதன் மூலதனத்தில் பாதியைப் பொது ஜனங்கள் கொடுக்க வேண்டுமென்ற விதியை எடுத்து விடவேண்டியது அவசியமென்றும் கூறினர்.

திரு. காளேஸ்வரராவ் பேசுகையில், கிருஷ்ணா ஜில்லாவில் விவசாயிகள் கடனாளியாயிருப்பதாயும், ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் அக்கிராம முழுதும் புஞ்சை நிலங்களாயினும் அங்கு விவசாயிகளுக்கு மொத்தத்தில் 70000 ரூபாய்வரை கடனிருப்பதாயும் எடுத்துக்காட்டினர்.

மந்திரி பதிலளிக்கையில், 1925-ம் வருடத்தில் சர்க்கார் இம்மாகாணத்தில் கூட்டுறவுச் சங்க முறையில் நில அடமான பாங்கிகள் ஸ்தாபிக்கும் கொள்கையை ஒப்புக்கொண்டு சுமார் 20 பாங்கிகள் ஸ்தாபித்ததில் அவை திருப்திகரமாக வேலை செய்து வருவதாயும், தற்போது மத்தியபாங்கியொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கும் ஏற்பாடாகியிருப்பதாயும் இதன் அவசியத்தைச் சர்க்கார் நன்குணர்ந்து தான் அதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்திருப்பதாயும் கூறினர். முடிவில் தொகை குறைக்கும் தீர்மானம் தோல்வியடைந்தது.

பிறகு திரு. அற்புதசாமி உடையார் கூட்டுறவுச் சங்க சம்பந்தமாக சர்க்கார் கொள்கையைக் குறித்தாலோசிப்பதன் பொருட்டு அத்தொகையில் ரூபாய் 100 குறைக்கப்படவேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்து அந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் தமது வேலைகளில் யுக்தாயுக்தப்படி நடக்க அனுமதிப்பது உசிதமென்றும், அடிக்கடி கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்ட்ரார் உத்தியோகஸ்தர்கள் உத்தியோகப்பற்றில்லாதாரடங்கிய மகாநாடு கூட்டியாலோசிப்பது அவசியமென்றும், கணக்குகள் சரிவர தணிக்கை செய்யப்பட்டு ஆரம்ப சங்கங்களை மிக்க கவனத்துடன் மேல்பார்வை பார்க்க வேண்டுமென்றும் கூறினர். அவர்பேசி முடியுமுன் சபை பகல் போஜனத்துக்குக் கலைந்தது.

மாலை நிகழ்ச்சிகள்

பகல் போஜனத்துக்குப் பின் சபை கூடியதும் சீமான் அற்புதசாமி உடையார் பின்னும் பேசுகையில் கூட்டுறவுச் சங்க இலாகாவின் வேலைகள் திருப்திகரமாயில்லை. சரியான மேல் பார்வையில்லாமையாலும் கணக்குகள் சரிவர தணிக்கை செய்யப்படாததாலும் சங்கவேலைகள் உறக்கத்திலிருக்கின்றன. கூட்டுறவு இயக்க சம்பந்தமாக விசேஷ பிரசாரம் செய்யவேண்டியது அவசியமாயிருக்கின்றது. திருச்சிசென்ட்ரல் பாங்கியின் நிலைமை மிகக் கேவலமாயிருக்கின்றது எனக் கூறினர்.

திரு. வி.ஐ. முனிசாமிப் பிள்ளை பேசுகையில், பங்குக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் கடன் பங்குத்தொகையைவிட ஐந்துமடங்காயிருப்பதாயும், வட்டி விகிதமும் அதிகமாயிருப்பதாயும், இவ்விலாக்காவின் வேலைகளினால் தாழ்த்தப்பட்ட வகுப்பார் பூர்ண நன்மையடையச் செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

திரு. ஆர். சீனிவாசய்யங்கார் பின்னும் அதிகமாக நில அடமான பாங்கிகளும், விவசாய பாங்கிகளும் ஸ்தாபிக்கப்படவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டி கூட்டுறவுச் சங்க வேலைகளினால் தொழிலாளிக்கும் விவசாயிகளுக்கும் நன்மை ஏற்படக் கூடுமென்று எதிர்பார்க்கப்பட்டாலும் அவற்றின் நன்மைகள் நூற்றுக்கு 15வீதமானவர்களுக்குக் கூட கிடைக்கவில்லை எனக் கூறி டென்னிஷனர்ட் கமிட்டி விசாரணையில் கொடுக்கப்பட்ட சாட்சியங்களை வெளியிட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. பரசுராம ராவ் பின்னும் அதிகப்படியாக நில அடமான பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டாலன்றி கூட்டுறவுச் சங்க வேலைகளால் பாராட்டத்தக்க நன்மையொன்றும் ஏற்பட முடியாதெனக்கூறினர்.

மந்திரி கனம் சேதுரத்னமையர் பதிலளிக்கையில் சபையினர் எடுத்துக் காட்டிய யோசனைகளைக் குறித்தாலோசிக்கப்படுமென்று வாக்களித்தார்.

திரு. ஆதிநாராயண செட்டியார் கூட்டுறவுச் சங்கங்களின் வேலைகளைப் பலப்படுத்தி ஆரம்ப சங்கங்களின் வேலைகள் மிக அதிருப்திகரமாயிருப்பதாயும் சங்க வேலைகளின் சம்பந்தமாக அவசியமான பாதுகாப்புகளில்லை என்றும், தற்போது பின்னும் 11-லட்சம் கேட்கப்படுவது உயர்தரஐரோப்பியஉத்தியோகஸ்தர்களின் சம்பளங்களுக்காகச் செலவிடப்படாமல் உபயோகமான வேலைகளில்செலவிட வேண்டுமென்றும்குறிப்பிட்டார்.

இதற்குள் இக்கிராண்டைக் குறித்தாலோசிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் கழிந்துவிட்டதால் மற்ற தொகை குறைக்கும் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டு திரு. அற்புதசாமி உடையார் தீர்மானம ஓட்டுக்கு விடப்பட்டு தோல்வி யடைந்ததால் கூட்டுறவுச் சங்க இலாகாவுக்கு 10·83 லட்சம் ஒதுக்கப்படவேண்டுமென்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிராண்டுக்கும் அனுமதியளிக்கப்பட்டது.

சின் கோனு பயிரிடும் தொழில்

பிறகு சட்ட மெம்பர் கனம் கிருஷ்ணன் நாயர் சின்கோனு பயிர்த் தொழிலுக்காக 1·94 லட்சம் ஒதுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தார்.

திரு. வி. ஐ. முனிசாமிப் பிள்ளை அத்தகைய் பயிர்த்தொழிலுக்காக ஏராளமான பணம் செலவிட்டு முடிவில் அது தொழிலில் வெற்றி ஏற்படாவிட்டால் என்ன செய்வதென்பதைக் குறித்து விவாதிக்க அத்தொகையில் ரூ.100குறைக்கப்பட வேண்டுமெனத்தீர்மானம் கொண்டுவந்து பேசுகையில் ஆனைமலை சின்கோனு பயிரிடும் திட்டம் வெற்றியாயில்லை. சர்க்கார் இத்தொழிலில் பெரும் பணம் செலவிட முற்படுமுன் அதனைக் குறித்து நன்காலோசித்துச் செய்யவேண்டும் எனக் கூறினர்.

தீர்மானத்தை திரு. அற்புதசாமி உடையார் ஆமோதித்தார்.

சட்ட மெம்பர்

சட்ட மெமபர் பதிலளிக்கையில் இதன் சம்மந்தமாக வரவுசெலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்குமுன்சர்க்கார் இதனைக்குறித்துநன்காலோசித்தனர். மருவட்டி கொய்னு தொழிற்சாலைக்கு வெளியூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சின்கோனு பட்டை சப்ளை செய்ய வேண்டியதாயிருக்கின்றது. இதனுல் வருடா வருடம் ஜாவா முதலிய நாடுகளிலிருந்து சின்கோனு பட்டை இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்த இலாகா லாபத்துடன் தான் வேலை செய்து வருகிறது எனக் கூறினர்.

திரு. வெங்கட்டரமணய்யங்கார் சின்கோனுபயிரிடும் தொழிலைப் பிரத்தியேக ஆசாமிகள் கைக்கொண்டு தூண்ட வேண்டுமெனக் கூறினர்.

முடிவில் தொகைக் குறைக்கும் தீர்மானம் தோல்வி யடைந்து கிராண்டுக்கு அனுமதிக்கப்பட்டது.

கைத்தொழில் இலாகா

பின்னர் மந்திரி கனம் சேதுரத்னமய்யர் வரவு செலவுத் திட்டத்தின் 27வது டிமாண்டின் கீழ் கைத்தொழில் இலாகா செலவுகளுக்கு 13.04 லட்ச ரூபாய் ஒதுக்க அனுமதிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவந்தார்.

திரு. வெங்கடபதி ராஜு வீட்டுக் கைத்தொழில்களுக்கு தாராளமாய்க் கடன் கொடுத்து விருத்தி செய்யவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவதன் பொருட்டு கைத் தொழில் இலாகாவுக்குக்கொடுக்கப்படும்11,69,800 ரூபாயில் ரூபாய் 100 குறைக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்துபேசுகையில் கைத் தொழில்களுக்குச் சர்க்கார் உதவியளிக்கும் சட்ட மிருந்தும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யத்தக்க உதவியொன்றும் செய்யப்படவில்லை. கிராமவாசி நூல் நூற்பதன் மூலம்மூன்று நான்கு ரூபாய் சம்பாதிப்பதால் அவருக்குச்சர்க்கார்கடன் கொடுத்தால் அதிகப் பணம் சம்பாதிக்க உதவியளிக்கக் கூடும் எனக் கூறினர்.

திரு. துளசிராம்தீர்மானத்தைஆமோதித்துப் பேசுகையில் சர்க்கார் குடிசைக் கைத்தொழில்கள் சம்பந்தமாக மாற்றுந்தாய் போல் நடந்து கொள்வதாயும், கைத்தொழில் கல்வி போதிக்கும் சர்க்கார் கல்விஸ்தாபனங்கள் ஐந்துதானிருப்பதாயும் சர்க்கார் கைத்தொழில் கல்விச் சாலைகளை அங்கீகரிப்பதில் பின்னும் தாராளமான நோக்குடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

திரு. ஹரிசர்வோத்தம ராவ் சோப்பு, காகிதம் [illegible]யவற்றையும் குடிசைக் கைத்தொழி[illegible] கொண்டு உதவிபுரிய வேண்டுமென்றும், சிறு கைத்தொழில்களுக்குத் தாராளமாகக் கொடுத்துதவ வேண்டுமென்றும் கூறினர்.

பிறகு திரு. கோபால மேனன் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். அவர் பேசி முடியுமுன் சபை கலைந்தது.

விளம்பரம்

இராமநாதபுரம் ஜில்லா போர்டுச் செலவில் மதராஸ் பெண் பிள்ளை கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில் மருத்துவம் பயின்று பழக மனுக்கள் தேவை. ஷெ மருத்துவம் ஒரு வருஷம் பயல வேண்டும். பயில விரும்புவோர்கள் இந்த ராஜதானியிலுள்ள பாஷைகளில் ஏதேனும் ஒன்றில் நன்ருய் எழுதப் படிக்க தெரிந்தவர்களா யிருக்கவேண்டும். தேர்ந்து எடுக்கப்பட்ட மாணுக்கர்களுக்கு மாதம் 1-க்கு ரூ. 15 விதம் 1 வருஷம் சம்பளமும், ரூ. 30 துணிச் செலவும் கொடுக்கப்படும். புறப்படும் இடத்திலிருந்து மதராஸ் போவதற்கு 3-வது வகுப்பு ரயில் சார்ஜ் கொடுக்கப்படும். மருத்துவம் படித்து முடிந்த பிறகு மதராஸிலிருந்து திரும்பி வர ரெயில் சார்ஜும் கொடுக்கப்படும். மாணுக்கர்கள் இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களுக்கு ரூ. 300-க்கு ஒரு பாண்டு எழுதிக்கொடுக்க வேண்டும். மருத்துவத்தில் பழகி தேர்ந்த பிறகு ஷெ ஜில்லா போர்டார் ஆதீனத்தில் 5 வருஷத்துக்கு மருத்துவச்சிகளாக லோக்கல் பண்டு ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்க வேண்டும்.

2. இஷ்டமுள்ள மாணுக்கர்கள் 1929 ஹு எப்ரில் மீ 15-ம் தேதிக்குள் மதுரையிலுள்ள இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களுக்கு அடியில் கண்ட விபரங்களுடன் மனுச்செய்து கொள்ள வேண்டும்.

(1) பெயர்
(2) வயது
(3) பிறந்த இடம்
(4) தற்கால விலாசம்
(5) ஜாதி
(6) தேக சௌகரியத்தின் நிலைமை
(7) படிப்பின் அளவு
(8) தற்காலம் என்ன வேலை
(9) நன்ருய் பேசவும் ஏதாவது விஷயத்தைப் பற்றி நன்ருய் விஸ்தரிக்கவும் தெரியுமா?
(10) நன்னடக்கை, மரியாதை, இவைகளைப்பற்றி யோக்கியதாப் பத்திரங்கள்.
(11) ஜாமீன் கொடுப்பவரின் பெயரும் விலாசமும்.

(Sd) M. மாணிக்கவாசகம்,
வைஸ் பிரசிடெண்ட்
இராமநாதபுரம் ஜில்லா போர்டு ஆபீஸ் மதுரை 20-3-1929 } —இன்—சார்ஜ்

(464)

பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது

மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்

(காலை 10-மணிக்கு)

„ எதியோப்பியா 29 3-29

மதராஸிலிருந்து ஸ்ட்ரெயிட்ஸுக்கு கப்பல் பிரயாணம்

(மாலை 4-மணிக்கு)

„ ஸர்தானு 27—3—29

இதர விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

பின்னி & கோ, மதராஸ் லிமிடெட்

(4) ஏஜண்ட்ஸ் மதராஸ்

சோதிடம்

ஜாதக நகல் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம் குறிப்பிட்டெழுத வேண்டும். எதிர்காலத்தைப்பத்திய 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1-0-0, மேல் ஒவ்வொரு கேள்விக்கும் 0-4-0. ஒரு வருஷம் வரையில் மாதவாரி பலன் எழுத ரூ. 2-0-0. ஐந்து வருஷங்களுக்கு ரூ. 7-8-0. வி. பி. செலவு 0-4-0 ஆகும்.

விலாசம்:—

ஆஞ்சநேயஸ்வாமி சோதிடாலயம்
திருத்தணி, இந்தியா

(107 எ)